ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1837/8 - 2013 නොවැම්බර් මස 19 වැනි අඟහරුවාදා - 2013.11.19
*1837/8 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுகாதார அமைச்சு**

இலங்கை தாதிமார் சேவை யாப்புவிதிக் கோவை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1684/18 ஆம் இலக்கமுடைய 2010.12.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தாதியர் சேவை யாப்பு விதிக்கோவை மற்றும் அதற்கு செய்யப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்ற ஏதாவது நடவடிக்கை அல்லது மேற்படி யாப்புவிதியின்கீழ் மேற்கொள்ள கருதியுள்ள ஏதேனும் நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கீழே காட்டப்பட்டுள்ள தாதியர் சேவை யாப்பு விதிக்கோவை மாற்றீடு செய்யப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

வைத்தியர் வை.டீ.நிஹால் ஜயதிலக,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
இல.385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச மாவத்தை,
கொழும்பு 10,
2013, நவெம்பர் 19.

**சுகாதார அமைச்சு**

இலங்கை தாதியர் சேவை யாப்புவிதிக் கோவை

1. நியமிப்புச் செய்யும் அதிகாரி பற்றிய விபரங்கள்:

1.1 நியமன அதிகாரி :

(அ) இலங்கை தாதியர் சேவையின் III, II, I தரம் மற்றும் சிறப்புத்தரம் : அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட சுகாதார அமைச்சின் செயலாளர்

(ஆ) இலங்கை தாதியர் சேவையின் விஷேடதரம் :
அரசாங்க சேவை ஆணைக்குழு.

(இ) இலங்கை தாதியர் சேவையின் நிறைவேற்றுத் தரம் :
அரசாங்க சேவை ஆணைக்குழு

2. சேவைப் பிரிவு பற்றிய விபரங்கள்:

2.1 சேவைப் பிரிவு

(அ) இலங்கை தாதியர் சேவையின் உத்தியோகத்தர்கள் ;
(ஆ) இலங்கை தாதியர் சேவையின் விஷேட தர உத்தியோகத்தர்கள் ;
(இ) இலங்கை தாதியர் சேவையின் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்கள்.

2.2 தரங்கள்:

(அ) இலங்கை தாதியர் சேவை
தரம் III
தரம் II
தரம் I
சிறப்புத்தரம்
(ஆ) இலங்கை தாதியர் சேவையின் விசேட தரம்
(இ) இலங்கை தாதியர் சேவையின் நிறைவேற்றுத்தரம்

2.3 ஒப்படைக்கப்படும் கடமைப்பொறுப்புக்கள் பற்றிய பொது வரைவிலக்கணம் :

நோய்த்தடுப்பு, சுகாதார மேம்பாடு, வேதனைகளிலிருந்து மீட்டெடுத்தல் மற்றும் புனர்வாழ்வுக்கான பணிகளை ஆற்றும் பொருட்டு அடிப்படை மானிட தேவைகளை இனங்கண்டு, விஞ்ஞான ரீதியான கோட்பாடுகளின் அடிப்படையில் நோய் பாரமரிப்பு (வைத்தியசாலை மற்றும் கிளினிக்) சேவைகள், சமுதாய மற்றும் உள தாதியர் சேவை, தாதியர் கல்விச்சேவை மற்றும் தனித்துவமான ஆராய்ச்சி தாதிச்சேவை போன்ற துறைகளின் சிறப்பான செயற்பாட்டுக்கு உறுதுணையாக அமையக்கூடிய, சிறப்பாகக் கையளிக்கப்படுகின்ற பணிகளையும் உபகாரக் கருமங்கள் மற்றும் பின்தொடர் கருமப் பணிகளையும் உள்ளடக்கிய செயன்முறைத் தொடராகும்.

3. பதவியின் தன்மை - நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும்.

4. சம்பளம் :

4.1 சம்பளக் குறியீட்டு இலக்கம்:

(அ) III, II, I மற்றும் சிறப்புத் தரம் MT 7 - 2006 - A ;
(ஆ) விசேட தரம் MT 8 - 2006 A ;
(இ) நிறைவேற்றுத்தரம் SL- 1-2006.

4.2 சம்பள அளவுத்திட்டம் :

(அ) 15,620 ரூபா - 4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 - 28,500 ரூபா
(ஆ) 24,180 ரூபா - 10 X 650 - 8 X 790 - 37,000 ரூபா
(இ) 22,935 ரூபா - 10X645 - 8X 790 - 17 X 1,050 - 53,555 ரூபா.

4.3 தரத்திற்குரிய தொடக்க சம்பள படிநிலைகள்:

| தரம் | சம்பள படிநிலைகள் | சம்பளம் ரூபா |
|---|---|---|
| III | MT 7 - 2006 - A இன் படிநிலை 01 | 15,620 |
| II | MT 7 - 2006 - A இன் படிநிலை 12 | 18,100 |
| I | MT 7 - 2006 - A இன் படிநிலை 23 | 21,660 |
| சிறப்புத் தரம் | MT 7 - 2006 - A இன் படிநிலை 34 | 25,620 |
| விசேட தரம் | MT 8 - 2006 - A இன் படிநிலை 4 | 26,130 |
| நிறைவேற்றுத்தரம் | SL - 1 - 2006 இன் படிநிலை 01 | 22,935 |

**குறிப்பு :**

பயிற்சிக் காலத்தில் முதலாம் ஆண்டில் மாதாந்தம் 12,290 ரூபா கொடுப்பனவும் இரண்டாம் ஆண்டில் மாதாந்தம் 13,040 ரூபா மற்றும் மூன்றாம் ஆண்டில் இருந்து மாதாந்தம் 13,160 ரூபா கொடுப்பனவும் வழங்கப்படும். பயிற்சி நிறைவின் போது தாதிமார் சேவையின் தரம் III இற்கு சேர்த்துக் கொள்ளப்படுகையில் அத்தரத்திற்குரிய சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்க சம்பள படிநிலையில் வைக்கப்படும்.(காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கை பிரகாரம் இக்கொடுப்பனவு மாற்றமடையக்கூடும்).

5. சேவைப் பிரிவுக்குரிய பதவி /பதவிகள் :

5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்,அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றுக்கு ஒப்படைக்கப் படுகின்ற பணிகள்:

| அங்கீகரிக்கப்பட்ட பதவிப்பெயர் | அங்கீகரிக்கப்பட்டபதவி அங்கீகரிக்கப்பட்ட தரம் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பதவிநிலைத் தாதி | இலங்கை தாதியர் சேவையின் III, II, I தரம் மற்றும் சிறப்புத்தரம் | 20105 |
| பதவிநிலைத் தாதி தரம் I (வைத்தியசாலை சேவை) | இலங்கை தாதியர் சேவை - தரம் I | 801 |
| பதவிநிலைத் தாதி தரம் I (கல்விச் சேவை) | இலங்கை தாதியர் சேவை - தரம் I | 218 |
| பதவிநிலைத் தாதி தரம் I (பொதுச் சுகாதாரம்) உத்தியோகத்தர் | இலங்கை தாதியர் சேவை - தரம் I | 59 |
| பதவிநிலைத் தாதி விசேட தரம் (வைத்தியசாலை சேவை) | இலங்கை தாதியர் சேவையின் விசேட தரம் | 174 |
| பதவிநிலைத் தாதி விசேட தரம் (கல்விச் சேவை) | இலங்கை தாதியர் சேவையின் விசேட தரம் | 60 |
| பதவிநிலைத் தாதி விசேட தரம் (பொதுச் சுகாதாரம்) உத்தியோகத்தர் | இலங்கை தாதியர் சேவையின் விசேட தரம் | 4 |
| தாதியர் கல்வித் துறையின் தாதியர் கல்லூரி அதிபர்கள் | இலங்கை தாதியர் சேவையின் விசேட தரம் | 19 |
| பணிப்பாளர் (தாதியர் கல்வி, தாதியர் பொதுச் சுகாதாரம், தாதியர் வைத்தியசாலைச் . சேவை | இலங்கை தாதியர் சேவை நிறைவேற்றுத் தரம். | 3 |

5.2 ஒருங்கிணைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை: –

(அ) பதவிநிலைத் தாதி III, II, I மற்றும் சிறப்புத்தரம் - 20,105
(ஆ) பதவி நிலைத் தாதி தரம் I
(வைத்தியசாலைச் சேவை, கல்வி, பொதுச் சுகாதாரம்) - 1078
(இ) விசேட தரம்
(i) தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவைகள், தாதிமார் கல்வி, பொதுச் சுகாதாரம்) - 238
(ii) தாதியர் கல்வித் துறையின் தாதியர் கல்லூரி அதிபர்கள் - 19
(ஈ) நிறைவேற்றுத்தரம் பணிப்பாளர் (தாதியர் கல்வி, தாதியர் பொதுச் சுகாதார சேவை, தாதியர் மருத்துவச் சேவை) - 03

(அரச சேவையின் தேவைப்பாடுகளுக்கிணங்க காலத்துக்குக் காலம் இவ்வெண்ணிக்கை மாற்றமடையக்கூடும்.)

6. ஆட்சேர்ப்பு வழிமுறை:

6.1 ஆட்சேர்ப்பு விகிதம்:

| வழிமுறை | விகிதம் |
|---|---|
| திறந்த | 100% |
| மட்டுத்தப்பட்ட | - |
| திறமை | - |

6.2 மாணவ தாதிப் பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளல்

6.2.1 க.பொ.த (உயர்தர) பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளல்

வருடாந்தம் பயிற்சியளிக்க வேண்டிய தேவையான எண்ணிக்கையில் 75% ம் க.பொ.த (உயர்தரம்) பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரிகளில் இருந்து தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் முழு நேர டிப்ளோமா பாடநெறிக்காக இணைத்துக் கொள்ளப்படுவர்.(பயிற்சிக் காலம் அமைச்சரவை தீர்மான இலக்கம் அமப/10/2604/415/179 மற்றும் 2010.11.10 ஆந் திகதியின் அமைச்சரவை தீர்மானம் மூலம் நியமிக்கப்பட்ட குழுவின் விதந்துரைகளுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும்).
அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகள் மாணவ தாதியர் பயிற்சியின் பின்னரான பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் இலங்கை தாதியர் சேவை பதவிநிலை தாதி தரம் III பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

6.2.2 விஞ்ஞானமானி தாதியர் பட்டப்படிப்பின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளுதல்.

வருடாந்தம் பயிற்சியளிக்க வேண்டிய தேவையான எண்ணிக்கையில் 25% மும் விஞ்ஞானமானி (தாதி) பட்டத்தின் அடிப்படையில் விண்ணப்பிக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் சுகாதார அமைச்சினால் நடாத்தப்படும் 6 மாத கால வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு பாடநெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர். பாடநெறியை சிறந்த முறையில் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் பயிற்சி நெறியின் முடிவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர் இலங்கைத் தாதியர் சேவை பதவிநிலைத் தாதி தரம் III பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

6.2.3 தகைமைகள்:

6.2.3.1 கல்வி / தொழில்சார் தகைமைகள்:

6.2.3.1.1 க.பொ.த. (உயர்தர) பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்

கல்விப் பொது தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவிற்குரிய, உயிரியல் / கணிதம் மற்றும் விவசாய துறைகளில் அனைத்துப் பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த ) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். பழைய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் /தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

6.2.3.1.2 விஞ்ஞானமானி தாதி பட்டத்தின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளல்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் விஞ்ஞானமானி தாதி பட்டத்தினை பூர்த்தி செய்து இருத்தல் வேண்டும்.

6.2.3.2 உடற் தகைமை:

(i) அனைத்துப் பரீட்சாத்திகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடிய உடற் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ii) உயரம் 04 அடி 10 அங்குலத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும் ;

(iii)பதவியின் கடமைகளை மேற்கொள்ளப் போதுமான உடற் தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.

6.2.3.3 ஏனையவை :

(i) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும் . (விஞ்ஞானமானி தாதி பட்டத்தின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இது ஏற்புடையதன்று) ;
(iii) விண்ணப்பதாரிகள் சிறந்த குணநலன் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;
(iv) ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் ;
(v) ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கையின் 5% ஆண்களுக்கானதாகும். ஆயினும், சேவை அவசியத்தின் பொருட்டு ஆண் விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு வீதம் 5% உச்ச வரம்புக்கு உட்பட்ட வகையில் காலத்துக்கு காலம் மாற்றப்படலாம் ;
(vi) தகைமை பெறும் திகதி - மேலே 6.2.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் அனைத்தும் விண்ணப்பப் பத்திரங்களைக் கோருவதற்கான அறிவித்தலில் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்படுகின்ற திகதியன்று எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரிகள் தகைமைகளை நிரூபிக்கும் பொருட்டு ஏற்புடைய சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப் பத்திரத்துடன் முன்னளிப்புச் செய்ய வேண்டும்.

6.2.3.4 வயது

| | |
|---|---|
| ஆகக் குறைந்த எல்லை | 18 வருடங்கள் |
| ஆகக் கூடிய வயது | 28 வருடங்கள் |

6.2.4 ஆட்சேர்ப்பு வழிமுறை:

6.2.4.1. ஒரு வருட க.பொ.த (உ.தர.) பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளல்.

இங்கு சேர்த்துக் கொள்ளப்படும் எண்ணிக்கை கருத்திற் கொள்ளப்படுகின்ற வருடத்தில் உயிரியல், கணிதம் மற்றும் விவசாய விஞ்ஞான துறைகளில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் எண்ணிக்கையின் விகிதாசார அடிப்படையில் பிரித்து அதன் பின்னர் மேற்படி ஒவ்வொரு பாடநெறியிலும் உச்ச Z பெறுமானத்தைப் பெறுகின்ற விண்ணப்பதாரிகள் மத்தியில் இருந்து மாவட்ட அடிப்படையில் தகைமையுடையோர் தெரிவு செய்யப்படுவர்.

6.2.4.2 இரண்டு வருடங்கள் (02) அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களில் க.பொ.த (உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளல்.

இங்கு சேர்த்துக் கொள்ளப்படும் எண்ணிக்கை கருத்திற் கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு வருடத்தினதும் விண்ணப்ப எண்ணிக்கைக்கு விகிதசம அடிப்படையில் பிரிக்கப்படும். அதன் பின்னர் ஒவ்வொரு வருடத்திற்காகவும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ள அளவினை அவ்வாண்டின் ஏற்புடைய உயிரியல்/கணிதம்/விவசாய விஞ்ஞானவிடயத் துறைகளில் விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விகிதாசார அடிப்படையில் பிரித்து அதன் பின்னர் உச்ச Z பெறுமானத்தைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் மத்தியில் இருந்து மாவட்ட அடிப்படையில் தகைமையுடையோர் தெரிவு செய்யப்படுவர்.

6.2.4.3 விஞ்ஞானமானி தாதி பட்டத்தின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளல்.

பொருத்தமான விண்ணப்பதாரிகள் பொது அறிவு மற்றும் உளச்சார்பு வினாக்களைக் கொண்ட 01 மணித்தியால எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். இதில் உயர் புள்ளி மட்டங்களைப் பெறும் விண்ணப்பதாரிகள் ஏனைய அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருந்தால் புள்ளிகளின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கையின் 5% ஆண்களுக்கானதாகும். ஆயினும், சேவை அவசியத்தின் பொருட்டு ஆண் விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு வீதம் 5% உச்ச வரம்புக்கு உட்பட்ட வகையில் காலத்துக்கு காலம் மாற்றப்படலாம்.

6.2.4.4 சாதாரண நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது).

ஈடேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் – ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அதற்கு அமைவாக வெளியிடப்படுகின்ற வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதை பரிசீலனை செய்தலும் உடற்றகுதியை பரிசீலனை செய்தலும்

6.2.4.4.1 சாதாரண நேர்முகப் பரீட்சைச் சபையை நியமிக்கும் அதிகாரி – சுகாதாரச் செயலாளர்

**குறிப்பு** :

நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சம்பந்தப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கிணங்க நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும்.

6.2.5 விண்ணப்பப் பத்திரங்களைக் கோரும் வழிமுறை
அரசாங்க வர்த்தமானியில் அல்லது பகிரங்க செய்தித்தாள்களில் அறிவித்தல்களைப் பிரசுரித்தல் மற்றும் இணையத்தளத்தில் விளம்பரப்படுத்துவதன் மூலமாக.

7. ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் தரம் – தரம் - III

கல்வி /தொழிற் தகைமைகள்
சுகாதார அமைச்சினால் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சுகாதார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் தாதியர் பயிற்சிக் கல்லூரிகளில் மாணவ தாதியர்களாக மூன்று வருடங்களைக் கொண்ட தாதி டிப்ளோமா பயிற்சி நெறியினை சிறப்பாக நிறைவேற்றியிருத்தல் வேண்டும்.

அல்லது

பல்கலைக் கழகங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றினால் விஞ்ஞானமானி (தாதி) பட்டத்தினைப் பெற்றிருப்பதுடன் சுகாதார அமைச்சினால் நடாத்தப்படும் 06 மாத கால வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்புப் பயிற்சி நெறியினை சிறப்பாக நிறைவேற்றியிருத்தல் வேண்டும்.

8. வினைத்திறன் காண் தடை
8.1

| எந்த வினைத்திறன் காண் தடை எனும் விபரம் | எத்தனை வருடங்களுக்கு முன்னர் வினைத்திறன் காண் தடை தாண்டல் வேண்டும் | வினைத்திறன தடையின் தன்மை எழுத்து மூலப் பரீட்சை/ தொழில்சார் பரீட்சை/சான்றிதழ் பாடநெறி/பிற |
|---|---|---|
| I ஆவது வினைத்திறன் காண் தடை | தரம் III இற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டு மூன்று (03) வருடங்கள் கழியும் முன்னர் | அட்டவணை I ஐப் பார்க்கவும் |
| II ஆவது வினைத்திறன் காண் தடை | தரம் II இற்கு பதவியுயர்வு பெற்று மூன்று (03) வருடங்கள் கழியும் முன்னர் | அட்டவணை II ஐப் பார்க்கவும் |
| III ஆவது வினைத்திறன் காண் தடை | தரம் I இற்கு பதவியுயர்வு பெற்று ஐந்து (05) வருடங்கள் கழியும் முன்னர் | அட்டவணை III ஐப் பார்க்கவும் |

8.2 வினைத்திறன் காண் தடை எவ்வளவு காலத்திற்கு ஒரு தடவை நடாத்தப்படும் ?
வருடத்திற்கு இரு தடவை.

8.3 வினைத்திறன்காண் தடைகள் சம்பந்தமாக பரீட்சைகளை நடாத்துகின்ற அதிகாரி யார்?
சுகாதாரச் செயலாளர்

09. மொழித்தேர்ச்சி:

| மொழித்தேர்ச்சி | தரம் | பெறப்பட வேண்டிய தேர்ச்சி |
|---|---|---|
| 1. அரச கருமமொழி | III | அரச கருமமொழியொன்றில் சேவைக்கு சேர்ந்திராவிடின் தகுதிகாண் காலத்திற்குள் அரச கருமமொழியொன்றில் தேர்ச்சி அடைதல் வேண்டும். |
| 2. மற்றைய அரச கருமமொழி | III | பொது நிருவாக சுற்றிக்கை இலக்கம் 07/2007 இற்கு அமைவாக மற்றும் அது சார்ந்த சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப உரிய மட்டத்தில் மொழித் தேர்ச்சியை அடைதல் வேண்டும் |

10. தரங்களுக்கு உயர்த்தப்படல் :

10.1 தரம் III இல் இருந்து தரம் II இற்கான தர உயர்வு:

10.1.1 சாதாரண செயலாற்றுகைக்கிணங்க

10.1.1.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்:

(i) சேவையின் தரம் III இற்கான நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். (பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்) ;
(ii) சேவையின் தரம் III இல் பத்து (10) வருடம் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தலும் ஏற்புடைய காலப்பகுதியில் பத்து (10) சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றிருத்தல் வேண்டும் ;
(iii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கு அமைய பதவியுயர்விற்கு கிட்டிய முந்திய பத்து (10) வருடங்களில் திருப்திகரமான அல்லது அதனை விட உயர்வான செயலாற்றுகையினை வெளிக்காட்டி இருத்தல் வேண்டும் ;
(iv) முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;
(v) சம்பந்தப்பட்ட மட்டத்திலான மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல்.
(vi) தர உயர்விற்கு கிட்டிய முந்திய ஐந்து (05) வருடங்களில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

10.1.1.2 தர உயர்வு வழங்கப்படும் வழிமுறை :

தகைமைகள் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்களால் தரம் II ற்கு தரம் உயர்த்துவதற்குரிய விண்ணப்பத்தினூடாக நியமன அதிகாரியிடம் வேண்டுகோள் விடுவிக்கப்படுமிடத்து,தகைமைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் தகைமைகளைப் பெறுகின்ற தினத்தில் இருந்து அமுலுக்கு வரத்தக்கதாக நியமன அதிகாரியால் தரம் II இற்கு தரம் உயர்த்தப்படுவர்.

10.2 தரம் II இல் இருந்து தரம் I இற்கு தரம் உயர்த்தப்படல்:

10.2.1 சாதாரண செயலாற்றுகைக்கிணங்க

10.2.1.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்:

(i) தரம் உயர்த்தப்படுவதற்கான தகைமையைப் பெறுகின்ற திகதியில் தாதிமார் சேவையின் தரம் II இல் பத்து (10) வருடகால முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்கு உரித்தான பத்து (10) சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றிருத்தலும்.
(ii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கிணங்க தர உயர்வுக்கு கிட்டிய முந்திய பத்து (10) வருடங்களில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர்வான மட்டத்திலான செயலாற்றுகையை வெளிக்காட்டி இருத்தல்
(iii) இரண்டாவது வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்
(iv) தர உயர்விற்கு கிட்டிய முந்திய ஐந்து (05)வருடங்களில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

10.2.1.2 தர உயர்வு வழங்கப்படும் வழிமுறை :

தகைமைகள் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்களால் உரிய விண்ணப்பத்தினூடாக நியமன அதிகாரியிடம் வேண்டுகோள் விடுவிக்கப்படுமிடத்து,தகைமைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் தகைமைகளைப் பெறுகின்ற திகதியில் இருந்து அமுலுக்கு வரத்தக்கதாக நியமன அதிகாரியால் தரம் I இற்கு தரம் உயர்த்தப்படுவர்.

10.3 தாதிமார் சேவையின் சிறப்புத்தரத்திற்கு தரம் உயர்த்தப்படல்

10.3.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்:

(i) தரம் உயர்த்தப்படுவதற்கான தகைமையைப் பெறுகின்ற திகதியில் தாதிமார் சேவையின் தரம் I இல் பத்து (10) வருடகால முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்கு உரித்தான பத்து (10) சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றிருத்தலும் ;
(ii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கிணங்க தர உயர்வுக்கு கிட்டிய முந்திய பத்து (10) வருடங்களில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர்வான மட்டத்திலான செயலாற்றுகையை வெளிக்காட்டி இருத்தல் ;
(iii) மூன்றாவது வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல் ;
(iv) தர உயர்விற்கு கிட்டிய முந்திய ஐந்து (05)வருடங்களில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

10.3.2 தர உயர்வு வழங்கப்படும் முறை :

தகைமைகள் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்களால் உரிய விண்ணப்பத்தினூடாக நியமன அதிகாரியிடம் வேண்டுகோள் விடுவிக்கப்படுமிடத்து,தகைமைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் தகைமைகளைப் பெறுகின்ற திகதியில் இருந்து அமுலுக்கு வரத்தக்கதாக நியமன அதிகாரியால் தரம் I இற்கு தரம் உயர்த்தப்படுவர்.

**குறிப்பு** :

சாதாரண செயலாற்றுகையின் அடிப்படையில் தரம் உயர்த்துகையில் உரிய தினத்தில் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையை சித்தியடையாத உத்தியோகத்தர்களின் தர உயர்வுத் திகதி வினைத்திறன் காண் தடையை சித்தியடைய எடுத்த காலத்திற்கு சமனான காலத்தால் பிற்போடப்பட வேண்டும்.

10.4 தாதிமார் சேவையின் விசேட தரத்திற்கு பதவியுயர்த்தல் :

10.4.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்:

(i) கிட்டிய முந்திய ஐந்து (05) வருடங்களில் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும், சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்குள் உரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் உழைத்துப் பெற்றிருத்தலும்.;

(ii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கிணங்க பதவியுயர்வுத் திகதிக்கு முந்திய ஐந்து(05) வருடங்களில் திருப்திகரமான மட்டத்தைப் பார்க்கிலும் உயர்வான செயலாற்றுகையை வெளிக்காட்டி இருத்தலும் ;

(iii) தேசிய தாதிமார் கல்வி நிறுவனத்தினால்/தாதியர் உயர் கற்கைக் கல்லூரியால் (PBS) நடாத்தப்படுகின்ற வாட்டு முகாமைத்துவமும் மேற்பார்வையும் அல்லது கற்பித்தலும் மேற்பார்வையும் அல்லது பொதுச்சுகாதார தாதித்துவம், மருத்துவிச்சிப் பணியும் /மனநல தாதித்துவ பணி உள்ளடக்கிய 1½ வருட கால டிப்ளோமா பாடநெறியை பயின்று, தரம் I இன் தாதி உத்தியோகத்தர் (தாதிமார் கல்வி, வைத்தியசாலை சேவைகள், பொதுச் சுகாதாரம்) பதவியில் ஐந்து (05) வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

10.4.2 பதவியுயர்வு வழங்கப்படும் முறை:

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட நேர் முகப் பரீட்சைக் குழுவினால் சாதாரண நேர்முகப்பரீட்சையின் மூலம் தகைமைகள் பரீட்சிக்கப்பட்ட பின்னர் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய நியமன அதிகாரியால் விசேட தரத்திற்கு பதவியுயர்த்தப்படுவர்.

**குறிப்பு:**

(i) விசேட தரத்திற்கு உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளதாக ஏற்றுக் கொள்ளப்படுவது விண்ணப்பதாரிகள் மேலே 10.4.1 இன் தகைமைகளை, விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற தினத்தில் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருப்பின் மாத்திரமே. தகைமைகளை நிரூபிக்கும் பொருட்டு சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பப்பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் ;

(ii) நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை சந்தர்ப்பத்திற்கேற்ப தரம் I இன் தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவைகள், தாதிமார் கல்வி , பொதுச் சுகாதாரம் ) பதவிக்கு பதவியுயர்த்தப்பட்ட திகதிக்கிணங்க சேவைமூப்பு,தாதிமார் சேவையின் தரம் I இற்கு நியமிக்கப்படுவதற்கான தேசிய தாதிமார் கல்வி நிறுவன பயிற்சியின் இறுதிப் பரீட்சையில் / தாதியர் உயர் கற்கைக் கல்லூரியின் (PBS) இறுதிப்பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளின் திறமை வரிசைக்கிரமம், ஏற்புடைய வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கமைய நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும்.

(iii) விசேட தரத்தைச் சேர்ந்த தாதி உத்தியோகத்தர் பதவியில் ஒவ்வொரு வருடத்திலும் சனவரி 1 ஆம் திகதியிலும் யூன் 30 ஆம் திகதியிலும் தோற்றுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கிணங்க வருடத்திற்கு இரு தடவைகள் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும் ;

(iv) விசேட தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்ட உத்தியோகத்தர்கள் 11.1 (ஆ),(இ),(ஈ),(உ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு நியமிக்கப்பட்டு இரு வார காலத்திற்குள் குறித்த பதவியில் சேவைக்கு சமுகமளிக்காவிடின், குறித்த உத்தியோகத்தரின் பதவியுயர்வு இரத்துச் செய்யப்படும்.

11. பதவிகளில் நியமிக்கப்படல்:

11.1 தகைமைகள்

| பதவி | தகைமைகள் |
|---|---|
| (அ) தரம் Iஇன் தாதி உத்தி யோகத்தர் (தாதிமார் கல்வி, வைத்திய சாலை சேவைகள்,பொதுச் சுகாதாரம்) | (i) தரம் II அல்லது தரம் I அல்லது சிறப்புத் தர தாதி உத்தியோகத்தராக இருத்தல்<br>(ii) தேசிய தாதிமார் கல்வி நிறுவனத்தினால் /தாதியர் உயர் கற்கைக் கல்லூரியால் (PBS) நடாத்தப்படுகின்ற வாட்டு முகாமைத்துவமும் மேற் பார்வையும் அல்லது கற்பித்தலும் மேற்பார்வையும் அல்லது பொதுச் சுகாதார தாதித்துவமும் மருத்துவிச்சிப் பணியும்/ மனநல தாதித்துவம் உள்ளடக்கிய 1½ வருட கால டிப்ளோமா பாடநெறியை பயின்று அதில் சித்தியடைந்த உத்தியோகத்தரொருவராக இருத்தல் ;<br>(iii) கிட்டிய முந்திய 05 வருடங்களிற்குரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் உழைத்துப் பெற்றிருப்பதுடன் முனைப்பான தும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும்<br>(iv) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கிணங்க பதவியுயர்வுத் திகதிக்கு முந்திய ஐந்து(05) வருடங்களில் திருப்திகரமான மட்டத்தைப் பார்க்கிலும் உயர்வான செயலாற்றுகையை வெளிக்காட்டி இருத்தலும். ; |
| (ஆ) விசேட தரத்தைச் சேர்ந்த தாதி உத்தியோகத்தர் (தாதி மார் கல்வி, வைத்திய சாலை சேவைகள், பொதுச் சுகா தாரம்) | (i) விசேட தர தாதி உத்தியோகத்தராக இருத்தல்<br>(ii) கிட்டிய முந்திய ஐந்து (05) வருடங்களில் உரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் உழைத்துப் பெற்றிருத்தலும் திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும்<br>(iii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கு இணங்க பதவியுயர்வுத் திகதிக்கு முந்திய ஐந்து(05) வருடங்களில் திருப்திகரமான மட்டத்தைப் பார்க்கிலும் உயர்வான செயலாற்றுகையை வெளிக்காட்டி இருத்தலும். |

| பதவி | தகைமைகள் |
|---|---|
| (இ) விசேட தர தாதிப் போதனாசிரியர் (பொதுச் சுகாதாரம் ) | (i) விசேட தர தாதி (பொதுச் சுகாதாரம்) உத்தியோகத்தராக இருத்தல் ;<br>(ii) கிட்டிய முந்திய ஐந்து (05) வருடங்களில் உரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் உழைத்துப் பெற்றிருத்தலும் திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் ;<br>(iii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கு இணங்க பதவியுயர்வுத் திகதிக்கு முந்திய ஐந்து(05) வருடங்களில் திருப்திகரமான மட்டத்தைப் பார்க்கிலும் உயர்வான செயலாற்றுகையை வெளிக்காட்டி இருத்தலும் ;<br>(iv) தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனத்தினால் (NIHS) நடாத்தப்படுகின்ற 06 மாத தாதி போதனாசிரியர் பயிற்சியை பூர்த்தி செய்திருத்தல் |
| (ஈ) பிரதேச நிருவாக பொதுச் சுகாதார தாதி உத்தியோகத்தர் | (i) விசேட தர தாதி (பொதுச் சுகாதாரம்) உத்தியோகத்தராக இருத்தல்<br>(ii) கிட்டிய முந்திய ஐந்து (05) வருடங்களில் உரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் உழைத்துப் பெற்றிருத்தலும் திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும்<br>(iii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கு இணங்க பதவியுயர்வுத் திகதிக்கு முந்திய ஐந்து(05) வருடங்களில் திருப்திகரமான மட்டத்தைப் பார்க்கிலும் உயர்வான செயலாற்று கையை வெளிக்காட்டி இருத்தலும். |
| (உ) தாதிமார் கல்லூரி அதிபர்கள் | (i) விசேட தர தாதி (தாதிமார் கல்வி) உத்தியோகத்தராக இருத்தல்<br>(ii) கிட்டிய முந்திய ஐந்து (05) வருடங்களில் உரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் உழைத்துப் பெற்றிருத்தலும் திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும்<br>(iii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கு இணங்க பதவியுயர்வுத் திகதிக்கு முந்திய ஐந்து(05) வருடங்களில் திருப்திகரமான மட்டத்தைப் பார்க்கிலும் உயர்வான செயலாற்றுகையை வெளிக்காட்டி இருத்தலும் |
| (ஊ) பணிப்பாளர் (வைத்திய சாலைச் சேவை) | விசேட தர தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) பதவியில் உள்ள உத்தியோகத்தராவதுடன் குறித்த பதவியில் கிட்டிய முந்திய ஐந்து (05) வருடங்களில் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் |
| (எ) பணிப்பாளர் (பொதுச் சுகா தாரம்) | விசேட தர தாதி உத்தியோகத்தர் (பொதுச் சுகாதாரம்) பதவியில் உள்ள உத்தியோகத்தராவதுடன் குறித்த பதவியில் கிட்டிய முந்திய ஐந்து (05) வருடங்களில் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் |
| (ஏ) பணிப்பாளர் (தாதிமார் கல்வி) | விசேட தர தாதி உத்தியோகத்தர் (தாதிமார் கல்வி) பதவியில் உள்ள உத்தியோகத்தராவதுடன் குறித்த பதவியில் கிட்டிய முந்திய ஐந்து (05) வருடங்களில் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் |

*11.2* தெரிவு செய்யப்படுகின்ற வழிமுறை:

(அ) (1) தரம் I இன் தாதி உத்தியோகத்தர் ( வைத்தியசாலை சேவைகள்) பதவிகளுக்கு நியமிக்கப்படல்

நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைகளின் 35% ஐப் பூர்த்தி செய்யும் பொருட்டு தரம்II, தரம் I மற்றும் சிறப்புத் தரத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய உத்தியோகத்தர்களிலிருந்து மேல் II/ 1 (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள டிப்ளோமா பாடநெறிக்காக தெரிவு செய்யப்படுவதற்கு எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை நடாத்தப்படும்.பரீட்சையின் பாடத் திட்டம் அட்டவணை iv மூலம் காட்டப்பட்டுள்ளது.

(i) கிட்டிய முந்திய ஐந்து (05) வருடங்களில் உரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் உழைத்துப் பெற்றிருத்தலும் திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும்;

(ii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கிணங்க பதவியுயர்வுத் திகதிக்கு முந்திய ஐந்து(05) வருடங்களில் திருப்திகரமான மட்டத்தைப் பார்க்கிலும் உயர்வான செயலாற்றுகையை வெளிக்காட்டி இருத்தல்.

(iii) வயது 48 வருடங்களுக்கு மேற்படாதவராக இருத்தல்.

எழுத்து மூலப் பரீட்சையில் உச்சப் புள்ளிகளைப் பெறுகின்றவர்களிலிருந்து திறமை அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையினர் டிப்ளோமா பாடநெறிக்காக தெரிவு செய்யப்படுவர். பாட நெறியில் சித்தியடையும் உத்தியோகத்தர்களுக்கு இடையே நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பதவிகளுக்கு நியமனம் வழங்கப்படும்.

மிகுதி 65% ஆம் வெற்றிடங்கள் தரம் II, தரம் I மற்றும் சிறப்புத் தரத்தில் உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய உத்தியோகத்தர்களின் சேவை மூப்பு, திறமை, தகுதி,வேலை மற்றும் நடத்தை ஆகியவற்றுக்கிணங்க சுகாதாரச் செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட நேர்முகப் பரீடசைக்குழு மூலம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு, தகுதியுடைய விண்ணப்பதாரிகளில் இருந்து மேலே 11.1(அ) (ii) இல் காட்டப்பட்டுள்ள டிப்ளோமா பாடநெறியின் பொருட்டு தேர்ந்தெடுக்கப்படுவர். அட்டவணை V ன் மூலம் நேர்முகப்பரீட்சையின் புள்ளி வழங்கப்படும் முறை காட்டப்பட்டுள்ளது.

(i) கிட்டிய முந்திய ஐந்து (05) வருடங்களில் உரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் உழைத்துப் பெற்றிருத்தலும் திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் ;

(ii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கிணங்க பதவியுயர்வுத் திகதிக்கு முந்திய ஐந்து (05) வருடங்களில் திருப்திகரமான மட்டத்தைப் பார்க்கிலும் உயர்வான செயலாற்றுகையை வெளிக்காட்டி இருத்தல் ;

(iii) வயது 48 வருடங்களுக்கு மேற்படாதவராக இருத்தல்.

**குறிப்பு** :

(1) தரம் I ஐச் சேர்ந்த தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலைச் சேவை) பதவியில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கிணங்க வருடத்திற்கு ஒரு தடவை எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையும் நடாத்தப்படும்.

(2) 11.1 (அ) (ii) இன் குறிப்பிடப்பட்டுள்ள டிப்ளோமா பாடநெறியை
தொடர்வதற்கு தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் பயிற்சியை தொடங்க முன் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்துக்கு வர வேண்டும்.

(3) 11.1 (அ) (ii) இன் குறிப்பிடப்பட்டுள்ள டிப்ளோமா பாடநெறியை தொடர்வதற்கு தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் பயிற்சியின் பின்னர் மேல் 11.1 (அ)இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு நியமிக்கப்பட்ட பின் இரு வார காலத்திற்குள் குறித்த பதவியை பொறுப்பேற்க வேண்டும். இவ்வாறு பதவியை பொறுப்பேற்கத் தவறும் உத்தியோகத்தர்களும், பயிற்சி நெறியை சிறந்த முறையில் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்களும் ஒப்பந்த தொகையை செலுத்த வேண்டியதுடன் அவர்கள் முன்னர் வகித்த பதவிக்கு திருப்பி அனுப்படுவர்.

(2) தரம் I இன் தாதி உத்தியோகத்தர்கள் ( தாதிமார் கல்வி /பொதுச் சுகாதாரம்) பதவிகளுக்கு நியமிக்கப்படல்
நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைகளின் 50% ஐப் பூர்த்தி செய்யும் பொருட்டு தரம்II,தரம்I மற்றும் சிறப்புத் தரத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய உத்தியோகத்தர்களிலிருந்து மேலே 11.1(அ)(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள டிப்ளோமா பாடநெறிக்காக தெரிவு செய்யப்படுவதற்கு எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை நடாத்தப்படும்.பரீட்சையின் பாடத் திட்டம் அட்டவணை iv மூலம் காட்டப்பட்டுள்ளது.

(i) கிட்டிய முந்திய ஐந்து (05) வருடங்களில் உரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் உழைத்துப் பெற்றிருத்தலும் திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் ;

(ii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கிணங்க பதவியுயர்வுத் திகதிக்கு முந்திய ஐந்து(05) வருடங்களில் திருப்திகரமான மட்டத்தைப் பார்க்கிலும் உயர்வான செயலாற்றுகையை வெளிக்காட்டி இருத்தல் ;

(iii) வயது 48 வருடங்களுக்கு மேற்படாதவராக இருத்தல்.

எழுத்து மூலப் பரீட்சையின் உச்சப் புள்ளிகளைப் பெறுகின்றவர்களிடையே திறமை அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையினர் டிப்ளோமா பாடநெறிக்காக தெரிவு செய்யப்படுவதுடன் ,பாடநெறியில் சித்தியடையும் உத்தியோகத்தர்களுக்கு நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பதவிகளுக்கு நியமனம் வழங்கப்படும்.

மிகுதி 50% வெற்றிடங்கள் தரம் II, தரம் I மற்றும் சிறப்புத் தரத்தில் உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய உத்தியோகத்தர்களின் சேவை மூப்பு, திறமை ,தகுதி,வேலை மற்றும் நடத்தை ஆகியவற்றுக்கிணங்க சுகாதாரச் செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு தகுதியுடைய விண்ணப்பதாரிகளில் இருந்து மேலே 11.1 (அ) (ii) இல் காட்டப்பட்டுள்ள டிப்ளோமா பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர். அட்டவணை V ன் மூலம் நேர்முகப்பரீட்சையின் புள்ளி வழங்கப்படும் முறை காட்டப்பட்டுள்ளது. பாடநெறியில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளில் இருந்து மீதி 50% வெற்றிடம் நிரப்பப்படும்.

(i) கிட்டிய முந்திய ஐந்து (5) வருடங்களில் உரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் உழைத்துப் பெற்றிருத்தலும் திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும்

(ii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கிணங்க பதவியுயர்வுத் திகதிக்கு முந்திய ஐந்து(5) வருடங்களில் திருப்திகரமான மட்டத்தைப் பார்க்கிலும் உயர்வான செயலாற்றுகையை வெளிக்காட்டி இருத்தல்.

(iii) வயது 48 வருடங்களுக்கு மேற்படாதவராக இருத்தல்.

**குறிப்பு :**

(1) தரம் I (கல்வி,பொதுச்சுகாதாரம் ஆகிய துறைகளில்) காணப்படும் வெற்றிடங்களுக்கு இணங்க வருடத்திற்கு ஒருமுறை எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பன நடாத்தப்படும்.

(2) 11.1 (அ) (ii) இல் காட்டப்பட்டுள்ள டிப்ளோமா பாடநெறியை பயிலுவதற்கு தேர்ந்து எடுக்கப்படும் உத்தியோகத்தர்கள் பயிற்சியினை ஆரம்பிப்பதற்கு முன்னர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.

(3) 11.1 (அ) (ii) இல் காட்டப்பட்டுள்ள டிப்ளோமாவிற்கு தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவர் பயிற்சியின் பின் மேலே 11.1(அ) வில் காட்டப்பட்டுள்ள பதவிக்கு நியமிக்கப்படும் போது இரண்டு வாரங்களுக்குள் அப்பதவியில் கடமையினை பொறுப்பேற்றல் வேண்டும். அவ்வாறு கடமையினை பொறுப்பேற்கத் தவறும் உத்தியோகத்தர்களும் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்களும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை செலுத்த நேரிடுவதுடன் அவர்கள் முன்னர் வகித்த பதவிக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

(4) தரம் I ஐச் சேர்ந்த தாதி உத்தியோகத்தர் (பொதுச் சுகாதாரம்) பதவிக்கு பெண்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) விஷேட தரத்தினைச் சேர்ந்த தாதி உத்தியோகத்தர் (கல்வி, வைத்தியசாலைச் சேவை, பொதுச் சுகாதாரச் சேவை) பதவிக்கு நியமித்தல்.

மேலே 11.1 இல் (ஆ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய விஷேட தரத்திலுள்ள உத்தியோகத்தர்களிலிருந்து தகைமையானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**குறிப்பு :**

(i) பதவிநிலை தாதி உத்தியோகத்தர் தரம் I (கல்வி /வைத்தியசாலைச்சேவை /பொதுச் சுகாதாரச் சேவை) ற்கு பதவியுயர்த்துப்பட்ட திகதியின் அடிப்படையில் சேவை மூப்பு மற்றும் தேசிய தாதியர் கல்வி நிறுவனத்தின் /தாதியர் உயர் கற்கை கல்லூரியின் (PBS) இறுதிப் பரீட்சையில் அவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை வரிசை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றிற்கு ஏற்ப நியமனம் செய்யப்படுவர்.

(ii) விசேட தரத்தைச் சேர்ந்த தாதி உத்தியோகத்தர் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகின்ற உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் ஆறுமாத கால (6) முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறியைப் பயில வேண்டும்.

(iii) விசேட தரத்தைச் சேர்ந்த தாதி உத்தியோகத்தர் பதவியில் ஒவ்வொரு வருடத்திலும் சனவரி மாதம் 1 ஆம் திகதியிலும் யூன் மாதம் 30 ஆம் திகதியிலும் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கிணங்க வருடத்திற்கு இரு தடவைகள் சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு வெற்றிடங்கள் நிரப்படும்.

(இ) விசேட தர தாதி போதனாசிரியர் (பொதுச் சுகாதாரம்) பதவிக்கு நியமித்தல்.

நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு தரம் I தாதி (பொதுச் சுகாதாரம்) உத்தியோகத்தர்களில் இருந்து 11.1(இ) (iv) இல் காட்டப்பட்டுள்ள தாதி போதனாசிரியர் பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்வதன் பொருட்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதகிக்ப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். அட்டவணை vi இல் நேர்முகப் பரீட்சையின் போது புள்ளி வழங்கப்படும் முறை காட்டப்படபட்டுள்ளது. இதில் உயர் புள்ளிகளை பெறுபவர்களிலிருந்து புள்ளிகளை பெற்றுள்ள ஒழுங்கின்படி காணப்படும் வெற்றிடங்களுக்கு சமமான எண்ணிக்கையில் 6 மாத தாதி போதனாசிரியர் பயிற்சியின் பொருட்டு தேர்ந்தெடுக்கப்படுவதுடன் பாடநெறியினை திறம்பட பூரத்திசெய்யும் உத்தியோகத்தர்களுக்கு காணப்படும் வெற்றிடங்களிற்கு அமைய நியமனம் வழங்கப்படும்.

(1) விஷேட தர தாதி போதனாசிரியர் (பொது சுகாதாரம்) பதவியில் காணப்படும் வெற்றிடங்களுக்கு அமைவாக வருடத்திற்கு ஒருமுறை கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(2) 11.1 (இ) (iv) ல் காட்டப்பட்டுள்ள டிப்ளோமாவிற்கு அமைய தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர்கள் பயிற்சியினை ஆரம்பிப்பதற்கு முன்னர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.

(3) 11.1 (இ) (iv) இல் காட்டப்பட்டுள்ள டிப்ளோமாவிற்கு அமைய தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவர் பயிற்சியின் பின் மேலே 11.1(இ) வில் காட்டப்பட்டுள்ள பதவிக்கு நியமிக்கப்படும் போது இரண்டு வாரத்திற்குள் கடமையினை பொறுப்பேற்றல் வேண்டும். அவ்வாறு கடமையினை பொறுப்பேற்கத் தவறும் உத்தியோகத்தர்களும், சிறந்த முறையில் பயிற்சியினை நிறைவேற்றத் தவறும் உத்தியோகத்தர்களும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை செலுத்த நேரிடுவதுடன் அவர் முன்னர் வகித்த பதவிக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

(ஈ) பிரதேச நிர்வாக பொதுச் சுகாதார தாதி உத்தியோகத்தர்

மேலே 11.1 இல் (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விஷேட தரத்தினைச் சேர்ந்த உத்தியோகத்தர்களிலிருந்து பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

**குறிப்பு :**

பதவிநிலை தாதி உத்தியோகத்தர் தரம் I (பொதுச் சுகாதாரம்) ற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ள திகதியின் அடிப்படையில் சேவை மூப்பு மற்றும் தேசிய தாதியர் கல்வி நிறுவனம் /தாதியர் உயர் கற்கை கல்லூரியின் (PBS) இறுதிப் பரீட்சையில் அவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை வரிசை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றுக்கு ஏற்ப நியமனம் வழங்கப்படும்

(உ) தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் பதவிக்கு நியமித்தல்.

மேலே 11.1 இல் (உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய விஷேட தரத்தினைச் சேர்ந்த உத்தியோகத்தர்களிலிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு தகைமையுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் முறை அட்டவணை vii இல் காட்டப்பட்டுள்ளது. இப்பதவியானது இடமாற்றம் அற்றதாகும் என்பதுடன் ஒரு தாதியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் வேறொரு தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு இடமாற்றம் பெறுவது வெற்றிடம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்னர் விண்ணப்பிப்பதன் ஊடாகவே சாத்தியமாகும்.

(ஊ) பணிப்பாளர் (தாதியர் வைத்திய சேவை)

மேலே 11.1 இல் (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய விஷேட தரத்தினைச் சேர்ந்த உத்தியோகத்தர்களிலிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு தகைமையுடையவர் தெரிவு செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் முறை அட்டவணை viii இல் காட்டப்பட்டுள்ளது.

(i) உரிய காலத்திற்குள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் உழைத்து பெற்றுக்கொண்டிருப்பதுடன் கிட்டிய 5 வருடங்களுள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ii) அனுமதிக்கப்பட்டுள்ள செயலாற்றுகை மதிப்பீட்டு திட்டத்திற்கு அமைய பதவி உயர்விற்கு முன்னைய 5 வருடங்களில் திருப்திகரமான மட்டத்தினைவிட உயர்வான செயலாற்றுகையினை வெளிக் காட்டியிருத்தல் வேண்டும்.

(எ) பணிப்பாளர் (பொதுச் சுகாதாரம்) பதவிக்கு நியமித்தல்

மேலே 11.1 இல் (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய விஷேட தரத்தினைச் சேர்ந்த உத்தியோகத்தர்களிலிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு தகைமையுடையவர் தெரிவு செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் முறை அட்டவணை ix இல் காட்டப்பட்டுள்ளது.

(i) உரிய காலத்திற்குள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் உழைத்து பெற்றுக்கொண்டிருப்பதுடன் கிட்டிய 5 வருடங்களுள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ii) அனுமதிக்கப்பட்டுள்ள செயலாற்றுகை மதிப்பீட்டு திட்டத்திற்கு அமைய பதவி உயர்விற்கு முன்னைய 5 வருடங்களில் திருப்திகரமான மட்டத்தினைவிட உயர்வான செயலாற்றுகையினை வெளிக் காட்டியிருத்தல் வேண்டும்.

(ஏ) பணிப்பாளர் (தாதியர் கல்வி) பதவிக்கு நியமித்தல்

மேலே 11.1 இல் (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய விஷேட தரத்தினைச் சேர்ந்த உத்தியோகத்தர்களிலிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு தகைமையுடையவர் தெரிவு செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் முறை அட்டவணை x இல் காட்டப்பட்டுள்ளது.

(i) உரிய காலத்திற்குள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் உழைத்து பெற்றுக்கொண்டிருப்பதுடன் கிட்டிய 5 வருடங்களுள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ii) அனுமதிக்கப்பட்டுள்ள செயலாற்றுகை மதிப்பீட்டு திட்டத்திற்கு அமைய பதவி உயர்விற்கு முன்னைய 5 வருடங்களில் திருப்திகரமான மட்டத்தினைவிட உயர்வான செயலாற்றுகையினை வெளிக் காட்டியிருத்தல் வேண்டும்.

12. ஒவ்வொரு நியமனம் தொடர்பாகவும் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளும் அரச சேவைகள் ஆணைக்குழுவின் 1589/30 ஆம் இலக்கமும் 2009.02.20 ஆந் திகதியும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட செயல் நடவடிக்கை விதிகளில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளும் ஏற்புடையனதாகும்.

13. (அ) தாதி மாணவப் பயிற்சி

(i) தாதி மாணவப் பயிற்சி நாடு பூராகவும் உள்ள தாதிமார் கல்லூரிகளில் நடத்தப்படும்.

(ii) பயிற்சி பெறுகின்ற காலப்பகுதிக்குள் உரிய பரீட்சையில் சித்தியடையாத அல்லது கல்விச் செயற்பாடுகளும் நடத்தையும் திருப்திகரமற்றதாகக் காணப்படுகின்ற அல்லது தாதிமார் கல்லூரிகளில் அமுலில் உள்ள சட்டவிதிக் கோவையின் பிரகாரம் பரீட்சைகள் மற்றும் விடுமுறை நிபந்தனைகளைக் கடைபிடிக்கத் தவறுகின்ற பயிலுநர்களின் பயிற்சியை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முடிவுறுத்தப்படலாம்.

(iii) பயிற்சிக் காலத்தில் திருமணம் முடிக்காதவராக இருத்தல் வேண்டும்.

(iv) பயிற்சி தொடங்குவதற்கு முன்னர் அரசாங்க மருத்துவப் பரிசோதனைக்குத் தோற்றி அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(v) தாதி மாணவ பயிற்சியை திறம்பட நிறைவு செய்கின்ற தாதிமாணவர்கள் தாதியர் சேவையின் தரம் III இல் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுதவற்கான தகைமையை பெறுவர்.

(ஆ) சேவைக்காலப் பயிற்சி

காலத்திற்குக் காலம் நடாத்தப்படுகின்ற சேவைக்காலப் பயிற்சி மூலமாக தொழில்சார் அறிவு தொடர்ச்சியாக வழங்கப்படும். சேவையில் உள்ள தாதிமார்கள் அனைவரினதும் தொழில்சார் மேம்பாட்டுக்கான தேவைப்பாடுகள் இப் பயிற்சிப் பாடநெறியின் மூலமாக வழங்கப்படும்.

14. உடன்படிக்கைகள்:

(1) பயிலுநர்கள் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக தாதிமார் சேவையின் தரம் 111 இன் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டால் 10 வருடங்கள் அரசாங்கத்திற்கு சேவையாற்றுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடல் வேணடும்.
சம்பந்தப்பட்ட உடன்படிக்கை தாதி மாணவ பயிற்சியில் சேர்ந்து கொண்ட முதலாவது மாதத்திற்குள் கைச்சாத்திடப்படல் வேண்டுமென்பதோடு, பயிற்சியைக் கைவிட்டுச் செல்கின்ற பயிலுநர்கள் உடன்படிக்கை செய்து கொண்ட பணத்தொகையும் (இப்பணத்தொகை காலத்திற்குக் காலம் செயலாளரால் தீர்மானிக்கப்படும்.) அதுவரை பெற்றுள்ள கொடுப்பனவுகளையும் மீளச்செலுத்த வேண்டியது கட்டாயமானதாகும்.

(2) சுகாதார அமைச்சினால் நடாத்தப்படும் 6 மாத கால வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு பயிற்சி நெறியிற்கு சேர்த்துக்கொள்ளப்படும் பட்டதாரிகள் பயிற்சியினை திருப்திகரமாக பூரணப்படுத்திய பின்னர் காணப்படும் வெற்றிடங்களுக்கு அமைய தாதி உத்தியோகத்தர் தரம் III ற்கு நியமிக்கப்பட்டால் 5 வருடங்களுக்கு அரசிற்கு சேவை புரிவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களுடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.

(3) தாதி உத்தியோகத்தர் தரம் I (கல்வி, வைத்தியசாலைகள் சேவை, பொதுச் சுகாதாரம்) பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் பயிற்சியினை திருப்திகரமாக நிறைவேற்றுவதாகவும் பயிற்சியின் பின்னர் பதவிக்கு நியமிக்கப்படும் போது இரண்டு வாரங்களுக்குள் உரிய பதவியில் கடமையினை பொறுப்பேற்பதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும். ஒப்பந்த தொகையானது சுகாதார செயலாளரினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும்.

(4) விஷேட தரத்தினைச் சேர்ந்த தாதி போதனாசிரியர் (பொதுச் சுகாதாரம்) பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் பயிற்சியினை திருப்திகரமாக நிறைவேற்றுவதாகவும், பயிற்சியின் பின்னர் பதவிக்கு நியமிக்கப்படும் போது இரண்டு வாரங்களுக்குள் உரிய பதவியின் கடமையினை பொறுப்பேற்பதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களுடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும். ஒப்பந்த தொகையானது செயலாளரினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும்.

15. வரைவிலக்கணம்:

(i) "வர்த்தமானி" என்பதன் மூலமாக கருதப்படுவது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை என்பதாகும்.

(ii) "உரிய திகதி" என்பதன் மூலமாக கருதப்படுவது தகுதிகளை பூரணப்படுத்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள திகதியாகும்.

(iii) "தாதி மாணவ மாணவியர்" என்பதன் மூலமாக கருதப்படுவது இந்த யாப்பு ஏற்பாடுகளின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்டு தாதி மாணவ பயிற்சியைப் பெற்றுக் கொண்டிருப்பவராவார்.

(iv) "தாதி உத்தியோகத்தர்" என்பது தொடர்ச்சியான தாதிமார் டிப்ளோமா பாடநெறியொன்றை அரசாங்க தாதிமார் கல்லுாரியொன்றில் பயின்று இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை மருத்துவப் பேரவையில்(SLMC) /இலங்கை தாதியர் பேரவையில்(SLNC) பதிவு செய்துள்ள ஒருவர்.

(v) ''முனைப்பான சேவைக்காலம்'' என்பது உரிய பதவிக்குரிய சம்பளம் பெற்று உண்மையிலேயே கடமையில் ஈடுபட்டு இருந்த சேவைக் காலத்தைக் குறிக்கும்.அரசினால் அனுமதிக்கப்பட்ட மகப்பேற்று விடுமுறையை தவிர ஏனைய அனைத்து சம்பளமற்ற விடுமுறைக் காலப்பகுதிகளும் முனைப்பான சேவைக் காலத்தினுள் கணக்கில் எடுக்கபட மாட்டாது.

(vi) ''பதவிநிலைத்தாதி'' என்பதன் மூலமாகக் கருதப்படுவது தாதி மாணவனை அன்று. அரசாங்கத் தாதியர் கல்லூரி ஒன்றில் தாதிமார் டிப்ளோமா பாடநெறியை வெற்றிகரமாகப் பயின்று இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை மருத்துவ பேரவையில் (SLMC) /இலங்கை தாதியர் பேரவையில் (SLNC) பதிவு செய்துள்ள (ஆண்/பெண்) உத்தியோகத்தர் ஆவார். இது வெறுமனே பதவிப்பெயராக மாத்திரம் அமைவதோடு அதன் மூலமாக பதவி நிலைத் தரம் என பொருள்பட மாட்டாது .06/2006 பொது நிருவாக சம்பள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்பார்வை பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள இரண்டாம் மட்டத்தின் பதவிகளும் மூன்றாம் மட்ட மற்றும் சிரேஷ்ட மட்ட அனைத்துப் பதவிகளும் பதவிநிலைத் தரத்தில் உள்ளடங்கும்.

(vii) ''செயலாளர்'' என்பதன் மூலமாகக் கருதப்படுவது சுகாதார விடயத்திற்குப் பொறுப்பான மத்திய அமைச்சின் செயலாளர் ஆவார்.

16. தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது ஏதேனும் வருடமொன்றுக்காக சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய எண்ணிக்கை அவ்வருடத்தின் யூன் 30 ஆந் திகதியில் அத்தரத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையாகும்.

17. ஆட்சேர்ப்பும் தரநிலைப் பதவியுயர்வினை வழங்குதலும்:

சேவைக்கு /பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல், நியமனம் வழங்கல் மற்றும் தரநிலைப் பதவியுயர்வு வழங்குதல் என்பன இந்த யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறையின் கீழ் மாத்திரம் ஈடேற்றல் வேண்டும்.

18. பதவிக்கு நியமனம் வழங்கும் அதிகாரி :

(அ) இலங்கை தாதியர் சேவை தரம் 1 இன் தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவைகள், தாதிமார் கல்வி, பொதுச் சுகாதாரம்) - அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள சுகாதார செயலாளர்.

(ஆ) இலங்கை தாதியர் சேவை விசேட தர தாதி உத்தியோகத்தர் - (வைத்தியசாலை சேவைகள், தாதிமார் கல்வி பொதுச் சுகாதாரம்) - அரசாங்க சேவை ஆணைக்குழு

(இ) பணிப்பாளர் (தாதியர் கல்வி, தாதியர் வைத்தியசாலை சேவைகள், தாதியர் பொது சுகாதாரம்) – அரசாங்க சேவை ஆணைக்குழு.

19. உள்ளீர்ப்புச் செய்தல்

19.1 (அ) உரிய திகதியாகும் போது சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள்
மறுசீரமைக்கப்பட்ட இலங்கை தாதிமார் சேவைக்கு உள்ளீர்க்கப்படல் கீழே குறிப்பிடப்பட்டவாறு மேற்கொள்ளப்படும்.

(i) சேவையின் தரம் II ஆ தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் புதிய
யாப்பின் தரம் III இற்கு
சேவையின் தரம் II அ தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் புதிய
யாப்பின் தரம் II இற்கு

(ii) சேவையின் தரம் I இன் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் புதிய
யாப்பின் தரம் I இற்கு

(iii) சேவையின் தரம் I இல் பத்து (10) வருடங்கள் முனைப்பான சேவைக் காலத்தை பூரணப்படுத்தி , தரம் I இற்குரிய சம்பள ஏற்றங்கள் பத்தையும் (10) உழைத்துப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் சிறப்பு தரத்திற்கு

(iv) சேவையின் விசேட தரத்தின் பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்கள் விசேட தரத்தின் (வைத்தியசாலை சேவைகள், தாதிமார் கல்வி ,பொதுச் சுகாதாரம்) பதவிகளுக்கு
உள்ளீர்த்தலின் விளைவாக உரிய தினங்களில் சம்பந்தப்பட்ட வகுப்புக்களில் /தரங்களில் அந்தந்த உத்தியோகத்தர்களுக்கு உரித்தாக விளங்கிய அவர்களின் சேவைமூப்பிற்கு பங்கம் ஏற்படாது.

*19.2 சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதன் பேரில் உத்தியோகத்தர்களின் ஏற்புடைய சம்பளம்*

*(1) உரிய தினத்தில் நிலவிய யாப்பின் கீழ் வகுப்பு II இன் 'ஆ' தரத்தில் உள்ள உத்தியோகத்தரொருவர் புதிய தரம் III இற்கு உள்ளீர்க்கப்படுதலின் பேரில் அல்லது II இன் 'ஆ' தரத்தில் உள்ள உத்தியோகத்தரொருவர் புதிய தரம் II இற்கு உள்ளீர்க்கப்படுதலின் பேரில் அல்லது தரம் I இல் உள்ள உத்தியோகத்தரொருவர் புதிய தரம் I இற்கு உள்ளீர்க்கப்படுதலின் பேரில் அல்லது விசேட தரத்தில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர் விசேட தரத்திற்கு உள்ளீர்க்கப்படுவதன் பேரில் சம்பளத்திலோ சம்பள ஏற்றத்திலோ மாற்றமேதும் ஏற்பட மாட்டாது.*

*20. இடைக்கால ஏற்பாடுகள்.*

*2010.11.01ம் திகதியில் இருந்து 2016.01.01 வரையான காலப்பகுதி இடைக் கால ஏற்பாட்டுக்கான காலமாகும். 2016.01.01 இற்கு பின்னர் புதிய யாப்பு விதிகள் பூரணமாக அமுல்படுத்தப்படும். இடைக் கால ஏற்பாட்டுக் காலத்தில் பின்வருமாறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.*

*20.1 வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை*

*20.1.1 முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை*

*வகுப்பு II "ஆ" பிரிவிற்குரிய தாதி உத்தியோகத்தராக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அல்லது தரம் III இனைச் சேர்ந்த தாதி உத்தியோகத்தராக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அல்லது தரம் III தாதி உத்தியோகத்தராக உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட தாதி உத்தியோகத்தர்கள் முதல் நியமனத் திகதியிலிருந்து 3 வருடத்திற்குள் (தகுதிகாண் காலப்பகுதியில்) முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற விதி இடைக்கால ஏற்பாட்டுக் காலத்திலும் அவ்வாறே செயற்படுத்தப்படும்.*

*20.1.2 இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை*

*20.1.2.1 தரம் II இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள அல்லது தரம் உயர்த்தப்பட்டுள்ள தாதி உத்தியோகத்தர் இந்த பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவார்.*

*20.1.2.2 2010.11.01 ஆந் திகதி பழைய சேவை யாப்பு விதிக் கோவையில் II "அ" பிரிவில் 6 வருட முனைப்பான சேவைக் காலத்தை பூரணப்படுத்தியுள்ள தாதி உத்தியோகத்தர்கள் இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடையவேண்டும் என்ற தேவைப்பாட்டிலிருந்து விடுவிப்புச் செய்யப்படுவர்.*

*20.1.2.3 ஏனைய தரம் II இற்குரிய அனைத்து தாதி உத்தியோகத்தர்களும் இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பது கட்டாயமானதாகும். அவர்களுக்கு அதற்காக சேவை யாப்பு விதிக் கோவை செய்ப்படுத்தப்படும் தினமான 2010.11.01 ஆம் திகதி அல்லது தரம் II இற்கு பதவி உயர்த்தப்பட்ட திகதி ஆகிய இரு தினங்களிலும் பின்னரான தினத்திலிருந்து மூன்று வருட காலத்திற்கு சலுகைக் காலம் வழங்கப்படும்.*

*20.1.2.4 இடைக் கால ஏற்பாட்டு காலத்தினுள் முதல் நியமனத் திகதி தொடக்கம் 5 வருடங்கள் முனைப்பான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள மற்றும் பழைய சேவை யாப்பு விதிக்கோவைக்கு அமைய II (அ) தரத்திற்கு தரம் உயர்த்துவதற்கு தேவையான ஏனைய அனைத்து தகைமைகளையும் கொண்டுள்ள தாதி உத்தியோகத்தர்கள் தரம் II ற்கு தரம் உயர்த்தப்பட்டதன் பின்னர் இந்த பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகயை பெறுவர். அவர்களுக்கு தர உயர்வு வழங்கப்படும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி தொடக்கம் 3 வருடங்கள் இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைவதற்கான சலுகைக் காலம் வழங்கப்படும்.*

*20.1.3 மூன்றாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை :*

*20.1.3.1 தாதி உத்தியோகத்தர் தரம் I (வைத்தியசாலைச்சேவை /தாதியர் கல்வி /பொதுச் சுகாதாரம்) பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் தரம் I ற்கு தரம் உயர்த்தப்பட்ட அல்லது உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் இந்த பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவர்.*

20.1.3.2 தரம் I ற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட தாதி உத்தியோகத்தர்களில் 2010.11.01ம் திகதிக்கு தரம் I இல் 05 வருட முனைப்பான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள தாதி உத்தியோகத்தர்கள் 3வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையிலிருந்து விலக்களிப்புச் செய்யப்படுவர். அதே போன்று தாதியர் உயர் கற்கைக் கல்லூரியில் (PBS) (தேசிய தாதியர் கல்வி நிறுவனம்) 1½ வருட கால டிப்ளோமா பயிற்சி நெறியினை நிறைவுசெய்துள்ள தரம் I (வைத்தியசாலைச்சேவை /தாதியர் கல்வி /பொதுச் சுகாதாரம்) பதவிகளில் உள்ள தாதி உத்தியோகத்தர்கள் 3 ஆவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சையிலிருந்து விலக்களிப்புச் செய்யப்படுவர்.

20.1.3.3 தரம் I இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட தாதி உத்தியோகத்தர்களில் 2010.11.01ஆம் திகதிக்கு தரம் I இல் 5 வருடத்திற்கு குறைவான முனைப்பான சேவைக் காலத்தையுடைய தாதி உத்தியோகத்தர்களுக்கு 3வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைவதற்காக இந்த சேவை யாப்பு விதிக் கோவை செய்ற்படுத்தப்படும் தினமான 2010.11.01 ம் திகதி அல்லது தரம் I இற்கு தரம் உயர்த்தப்பட்ட திகதி ஆகிய இரு தினங்களிலும் பின்னரான திகதியில் இருந்து 5 வருட காலத்திற்கு சலுகைக் காலம் வழங்கப்படும்.

20.1.3.4 2010.11.01 ம் திகதியின் பின்னர் தரம் I இற்கு தர உயர்வு பெறும் அனைத்து உத்தியோகத்தர்களும் 3ஆவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

20.2 தரங்களுக்கு உயர்த்தப்படல்.

20.2.1 தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்தல்
புதிய தாதியர் சேவை யாப்புவிதிக் கோவைக்கு அமைய மேற்கொள்ளப்படும்.

20.2.2 தரம் III இல் இருந்து தரம் II ற்கு தரம் உயர்த்துதல்

இடைக்கால ஏற்பாட்டுக் காலத்தில் தரம் III இல் 5 வருடங்கள் முனைப்பான சேவைக்காலத்தை பூரணப்படுத்தியுள்ளதும், பழைய தாதியர் சேவை யாப்பு விதிக்கோவைக்கு அமைய தேவையான அனைத்து தகைமைகளையும் கொண்டுள்ளதுமான தாதி உத்தியோகத்தர்களாயின் அவர்கள் 5 வருட சேவைக் காலத்தை பூரணப்படுத்திய திகதி அல்லது தேவையான ஏனைய தகைமைகளை பூர்த்தி செய்த திகதி ஆகிய இரு திகதிகளில் பின்னரான திகதி தொடக்கம் தரம் II ற்கு தரம் உயர்த்தப்படுவர். இடைக்கால ஏற்பாட்டுக்கான காலம் கடந்த பின்னர் தகைமைகளைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்கள் புதிய தாதியர் சேவை யாப்பு விதிகளுக்கு அமைய தரம் உயர்த்தப்படுவர். இங்கு பழைய தாதியர் சேவை யாப்பு விதிக் கோவையல் II "ஆ" பிரிவிற்குரிய சேவைக்காலம், புதிய தாதியர் சேவை யாப்பு விதிகளின் பிரகாரம் தரம் III ற்குரிய சேவைக் காலம் எனக் கொள்ளுதல் வேண்டும்.

20.2.3 தரம் II இல் இருந்து தரம் I இற்கு தரம் உயர்த்துதல்

இடைக்கால ஏற்பாட்டுக் காலத்தில் தரம் II இல் 10 வருடங்கள் முனைப்பான சேவைக்காலத்தை பூரணப்படுத்தியுள்ள உத்தியோகத்தர்கள் தரம் I ற்கு தரம் உயர்த்தப்படுவர். இங்கு பழைய தாதியர் சேவை யாப்பு விதிக்கோவைக்கு அமைய II (அ) பிரிவின் சேவைக்காலமானது புதிய தாதியர் சேவை யாப்பு விதிக் கோவையில் தரம் II ற்கு உரிய சேவைக் காலமாகக் கருதப்படும்.

இடைக் கால ஏற்பாட்டுக் காலம் கடந்த பின்னர் புதிய தாதியர் சேவை யாப்பு விதிகளுக்கு அமைய தரம் உயர்வுகள் வழங்கப்படும். எவராவது ஒரு உத்தியோகத்தர் தரம் II இல் 10 வருட சேவைக் காலத்தை பூரணப்படுத்திய திகதி 2010.11.01 ஆம் திகதிக்கு முன்னராயின் அந்த உத்தியோகத்தர் தரம் I இற்கு 2010.11.01 ஆம் திகதியிலிருந்து தரம் உயர்த்தப்படுவர்.

20.3 பதவிகளுக்கு நியமித்தல்

20.3.1 தாதி உத்தியோகத்தர் தரம் I (வைத்தியசாலைச்சேவை /கல்வி /பொதுச் சுகாதாரம்) பதவிகளுக்கு நியமித்தல்.

புதிய தாதியர் சேவை யாப்பு விதிக்கோவைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படும்.

தாதி உத்தியோகத்தர் தரம் I (கல்வி), தாதி உத்தியோகத்தர் தரம் I (பொதுச் சுகாதாரம்) ஆகிய பதவிகளுக்கு போட்டிப் பரீட்சையின் மூலம் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

தாதி உத்தியோகத்தர் தரம் I (வைத்தியசாலை சேவை) பதவியின் 35% மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலமும், 65% தரம் II , தரம் I மற்றும் சிறப்புத் தரத்தில் உள்ள தாதி உத்தியோகத்தர்களில் இருந்து சேவை மூப்பு அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும்.

20.3.2 விஷேட தரத்தில் பதவிகளுக்கு நியமித்தல்.

இடைக்கால ஏற்பாட்டுக் காலத்தில் மேலே 20.1.3 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக இந்த சேவை யாப்பு விதிக் கோவைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும்.

21. இந்த இலங்கையின் தாதிமார் சேவைகள் யாப்பு 2010.11.01 ஆந் திகதியில் இருந்து அமுலுக்கு வருகின்றது.

22. இந்த யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிப்பதற்கு ஏற்ப அவசியமாகின்ற தேர்ச்சிகளையும் திறன்களையும் சகல உத்தியோகத்தர்களும் உரிய முறையில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இலங்கை தாதிமார் சேவையின் அனைத்து உத்தியோகத்தர்களும் அரசாங்கத்தின் பொதுவான பணிப்புரைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்கள் , அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதி மற்றும் காலத்திற்கு காலம் அமுலில் உள்ள அரசாங்கத்தின் பொது ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

**குறிப்பு** :

இந்த யாப்பு விதிகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிராத விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவே இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும். இந்த யாப்பின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகளுக்கிடையில் ஒவ்வாத்தன்மை காணப்படின் சிங்கள மொழியிலான பிரதியே செல்லுபடியானதாகும்.

## அட்டவணை I

தாதிமார் சேவையின் தரம் III ஆம் உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்படுகின்ற
1 ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை

1. பதவிக்காக சேர்த்துக் கொள்ளப்பட முன்னர் தாதி மாணவராக மாணவியாக பயிற்சிபெற விண்ணப்பித்த மொழி மூலத்திலேயே விடை அளிக்க வேண்டும்.

2. பதவியின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பெறுவர்.

3. அனைத்துப் பாடங்களுக்காகவும் ஒரே தடவையிலோ தனித்தனியாக பல்வேறு தடவைகளிலோ தோற்ற முடியும்.

4. சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்த பட்சம் 40% புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

5. இப்பரீட்சை கீழே காட்டப்பட்டவாறு (2) வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

தாபனவிதிக் கோவை : மூன்று (3) மணித்தியால வினாத்தாள்கள் ஆகும்.100 புள்ளிகள்: இங்கு கட்டுரை வடிவம் கொண்ட 8 வினாக்கள் தரப்படும்.பரீட்சார்த்திகள் இதில் 5 இற்கு விடை அளிக்க வேண்டும்.

நிதி ஒழுங்குவிதிகள் : மூன்று (3) மணித்தியால விடைத்தாள் ஆகும்.100 புள்ளிகள் இங்கு கட்டுரை வடிவம் கொண்ட 8 வினாக்கள் தரப்படும் பரீட்சார்த்திகள் இதில் 5 இற்கான விடை அளிக்க வேண்டும்.

**பாடத்திட்டம்**:

(i) தாபன விதிக்கோவை
தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் ii,iii,vii,viii,xii,xiii,xvii,xxii,xxiii,xxv ஆகியவற்றில் அடங்கிய விடயங்கள் பற்றிய அறிவினை பற்றிய எழுத்துமூல வினாத்தாள் ஆகும்.

(ii) நிதி ஒழுங்குவிதிகள்
நிதி ஒழுங்குவிதிகளில் 1 இல் இருந்து 157 வரையான நிதி ஒழுங்குவிதிகளில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் பற்றிப் பரிசோதிக்கும் எழுத்துமூல வினாத்தாள் ஆகும்.

## அட்டவணை II

தாதிமார் சேவையின் தரம் II ஆம் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படுகின்ற
2 ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை

1. பதவிக்காக சேர்த்துக் கொள்ளப்பட முன்னர் தாதி மாணவராக மாணவியாக பயிற்சிபெற விண்ணப்பித்த மொழி மூலத்திலேயே விடை அளிக்க வேண்டும்.

2. பதவியின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பெறுவர்.

3. அனைத்துப் பாடங்களுக்காகவும் ஒரே தடவையிலோ தனித்தனியாக பல்வேறு தடவைகளிலோ தோற்ற முடியும்.

4. சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்த பட்சம் 40% புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

5. இப்பரீட்சை கீழே காட்டப்பட்டவாறு (2) வினாத்தாள்களைக் கொண்டதாகும்:–

(i) தாதித்தொழில் பற்றிய கோட்பாடு சார்ந்த அறிவு (3 மணித்தியாலம்) – 100 புள்ளிகள்

(ii) வாட்டு முகாமைத்துவம் (3 மணித்தியாலம்) – 100 புள்ளிகள்

பாடத்திட்டம் :

(i) தாதித்தொழில் பற்றிய கோட்பாடு சார்ந்த அறிவு

சத்திர சிகிச்சை தாதித்துவம்
மருத்துவ தாதித்துவம்
சிறுவர் தாதித்துவம்

(ii) வாட்டு முகாமைத்துவம்

நோயாளர் பராமரிப்பு,முகாமைத்துவம்
பஞ்சகர்ம எண்ணக்கரு
செயற்பாட்டுத்திட்டம் - மாதாந்த /வருடாந்த

## அட்டவணை III

தாதிமார் சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படுகின்ற மூன்றாவது
வினைத்திறன்காண் தடைப்ரீட்சை

1. பதவிக்காக சேர்த்துக் கொள்ளப்பட முன்னர் தாதி மாணவராக மாணவியாக பயிற்சிபெற விண்ணப்பித்த மொழி மூலத்திலேயே விடை அளிக்க வேண்டும்.

2. பதவியின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளைப் பெறுவர். தாதியர் உயர் கற்கைக் கல்லூரியில் (தேசிய தாதியர் கல்வி நிறுவனம்) $1\frac{1}{2}$ வருட கால டிப்ளோமா பயிற்சி நெறியினை நிறைவுசெய்துள்ள தரம் I (வைத்தியசாலைச்சேவை / கல்வி / பொதுச் சுகாதாரம்) பதவிகளில் உள்ள தாதி உத்தியோகத்தர்களும் 3வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையிலிருந்து விலக்களிப்புச் செய்யப்பட வேண்டும்.

3. அனைத்துப் பாடங்களுக்காகவும் ஒரே தடவையிலோ தனித்தனியாக பல்வேறு தடவைகளிலோ தோற்ற முடியும்.

4. சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்த பட்சம் 40% புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

5. இப்பரீட்சை கீழே காட்டப்பட்டவாறு (2) வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

(i) பொது முகாமைத்துவம் (3 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(ii) பொது தாதித்தொழில் (3 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

பாடத்திட்டம் :

1. பொது முகாமைத்துவம்
   - நோயாளர் பராமரிப்புத்திட்டம்
   - பணியாளர் கண்காணிப்பும் மேற்பார்வையும்
   - வேலைகளை பகிர்ந்தளித்தல் - Deligation
   - தலைமைத்துவம் - Leadership
   - மனிதவள முகாமைத்துவம்

2. பொது தாதித்தொழில்
   - ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு (17 விடயங்கள் சார்ந்ததாக)
   - நோய்த்தடுப்பும் சுகாதார மேம்பாடும்
   - கல்வியியல் கோட்பாடுகள்
   - தாதித்தொழில் ஆராய்ச்சிக் கோட்பாடுகள் - Nursing Research
   - வாட்டு முகாமைத்துவம் - Ward Managmenet
   - தொடர்பாடல் - Communication
   - குழு எண்ணக்கரு - Team work
   - பணியணி அபிவிருத்தி

## அட்டவணை IV

பரீட்சை தொடர்பான மாதிரி

1. பரீட்சையின் பெயர் : பதவிநிலை தாதி உத்தியோகத்தர் தரம் I (வைத்தியசாலை சேவை, தாதியர் கல்வி, பொதுச் சுகாதாரம்) பதவிகளுக்கு நியமிப்புச் செய்வதற்கான பயிற்சி நெறியின் பொருட்டு தேர்ந்தெடுத்தல்.

2. பரீட்சை தொடர்பான விபரம் -
மூன்று விடயப்பரப்புக்களையுடைய மூன்று பரீட்சைகள்

| வினாத்தாள் | காலம் | புள்ளிகள் | சித்தியடைவதன் பொருட்டான புள்ளி | |
|---|---|---|---|---|
| சாதாரண கட்டுரை | 1 மணித்தியாலம் | 100% | 40% | தரம் I தாதி உத்தியோகத்தர் (கல்வி) பதவிக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களுக்கு மட்டும் பொருத்தமானதாகும். |
| தாதித்துவம் தொடர்பான தற்கால நிகழ்வுகள் | 2 மணித்தியாலங்கள் | 100% | 40% | |
| ஆங்கில மொழி | 1½ மணித்தியாலங்கள் | 100% | 40% | |

3. பரீட்சையினை நடாத்தும் அதிகாரமுடையவர் - சுகாதார செயலாளர்

4. பரீட்சை நடாத்தப்படுவது எவ்வளவு காலத்திற்கு ஒரு முறையாகும் - காணப்படும் வெற்றிடங்களுக்கு அமைவாக அவசியத்தின் பொருட்டு சுகாதார செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

5. பரீட்சை தொடர்பான பாடத்திட்டம்

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| சாதாரண கட்டுரை | இவ்வினாத்தாளின் பொருட்டு வசனக் கட்டுரை எழுதுதல் உள்ளடக்கப்படும் |
| தாதிச் செயற்பாடுகள் தொடர்பான தற்கால நிகழ்வுகள் | தாதி உத்தயோகத்தர் ஒருவர் நிகழ் கால தாதிச் செயற்பாடு தொடர்பாக பெற்றுள்ள அறிவு பரிசோதிக்கப்படும் |
| ஆங்கில மொழி | க.பொ.த. (சா./த) மட்ட வினாத்தாள் |

### அட்டவணை V

தரம் I இன் தாதி உத்தியோகத்தர் (தாதிமார் கல்வி, வைத்தியசாலை சேவைகள்,பொதுச் சுகாதாரம்) பதவிக்கு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் நியமிப்பதற்குரிய பயிற்சி நெறியின் பொருட்டு தேர்ந்தெடுப்பதற்கான புள்ளிகள் வழங்கும் விதிமுறைகள்.

| | |
|---|---|
| 1. சேவை மூப்பு தாதிச் சேவையில் தரம் II, I மற்றும் உயர் வகுப்பில் ஒவ்வொரு வருடத்திற்கும் 08 புள்ளிகள் வீதம் | ஆகக் கூடிய புள்ளிகள் 80 |
| 2. திறமை | ஆகக் கூடிய புள்ளிகள் 20 |
| (i) பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட பட்டத்திற்கு 05 புள்ளிகள் | |
| (ii) சுகாதார செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் விடயம் தொடர்பாக பெற்றுக் கொண்ட டிப்ளோமா தொடர்பாக03 புள்ளிகள் | |
| (iii) விசேட செயற்பாடுகளுக்கு - 12 புள்ளிகள் | |
| அனைத்து விஷேட செயற்பாடுகளுக்காகவும் 02 புள்ளிகள் வீதம் வழங்கப்படுவதுடன் உரிய விடயத்திற்குரிய விசேட செயற்பாடானது நேர்முகப் பரீட்சைக் குழுவினால் தீர்மானிக்கப்படும். | |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

### அட்டவணை VI

விஷேட தர தாதி போதனாசிரியர் (பொதுச் சுகாதாரம்) பதவிக்கு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் நியமிப்பதற்குரிய பயிற்சி நெறியின் பொருட்டு தேர்ந்தெடுப்பதற்கான புள்ளிகள் வழங்கும் விதிமுறைகள்.

| | |
|---|---|
| சேவை மூப்புதாதி உத்தியோகத்தர் தரம் I (பொதுச் சுகாதாரம்) பதவியில் 07 வருடங்கள் சேவையாற்றிய பின்னரான ஒவ்வொரு வருடத்திற்கும் 05 புள்ளிகள் வீதம். | ஆகக் கூடிய புள்ளிகள் 80 |
| 2. திறமை<br>(i) பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட பட்டத்திற்கு05 புள்ளிகள்<br>06 புள்ளிகள் | ஆகக் கூடிய புள்ளிகள் 20 |
| (ii) பயிற்சி நிலையத்தில் சேவையாற்றிய ஒவ்வொ வருடத்திற்கும் 2 புள்ளிகள் வீதம்<br>06 புள்ளிகள் | |
| (iii) செயலாற்றுகை தரங்கணிப்பு தொடர்பாக - 09 புள்ளிகள்<br>நன்று - 09<br>சாதாரண மட்டத்திற்கு மேல் - 07<br>சாதாரணம் - 05<br>செயலாற்றுகை தரங்கணிப்பு தொடர்பாக வழங்கப்பட வேண்டிய புள்ளிகள் தொடர்பாக நேர்முகப் பரீட்சைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். | |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

## அட்டவணை VII

**தாதியர் பயிற்சிக் கல்லூரிகளின் அதிபர் பதவிக்கு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் தேர்ந்தெடுப்பதற்கான புள்ளிகள் வழங்கும் விதிமுறைகள்.**

| | | | |
|---|---|---|---|
| 1. | விசேட தரத்தின் சேவை மூப்பிற்கு | - | (50 புள்ளிகள்) |
| 2. | தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் பதவியில் உள்ள அனுபவத்திற்கு | - | (20 புள்ளிகள்) |
| 3. | விஷேட திறமைக்கு | - | (10 புள்ளிகள்) |
| 4. | தொழிற் தகைமைக்கு | - | (15 புள்ளிகள்) |
| 5. | நேர்முகப் பரீட்சைக்கு | - | (05 புள்ளிகள்) |

**குறிப்பு :**

ஆட்சேர்ப்பிற்காக விண்ணப்பங்கள் கோரப்படும் போது மேலே குறிப்பிடப்பட்ட புள்ளி வழங்குதல் பிரதான விடயம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய புள்ளியுடனாகும். நேர்முகப் பரீட்சையின் பொருட்டான விபரமான புள்ளி வழங்கும் விதிமுறைகளை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு சுகாதார அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## அட்டவணை VIII

**பணிப்பாளர் (தாதியர் வைத்திய சேவை) பதவிக்கு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் தேர்ந்தெடுப்பதற்கான புள்ளிகள் வழங்கும் விதிமுறைகள்.**

| | | |
|---|---|---|
| 1. | தாதிச் சேவையில் (வைத்தியசாலைச் சேவை) விஷேட தரத்திற்கான சேவை மூப்பிற்கு | - 30 புள்ளிகள் |
| 2. | தாதிச் சேவையில் (வைத்தியசாலைச் சேவை) அனுபவத்திற்கு | - 30 புள்ளிகள் |
| 3. | விடயப்பரப்பு தொடர்பான கல்வித் தகைமைக்கு | - 25 புள்ளிகள் |
| 4. | விடயப் பரப்பு தொடர்பான வேறு வெளிவாரியான செயற்பாடுகளுக்கு | - 10 புள்ளிகள் |
| 5. | நேர்முகப் பரீட்சை குழுவின் தீர்மானத்தின்படி திறமை, தலைமைத்துவம், எண்ணக்கரு, ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறமைக்கு | - 05 புள்ளிகள் |

மொத்தப் புள்ளிகள் - 100

**குறிப்பு :**

ஆட்சேர்ப்பிற்காக விண்ணப்பங்கள் கோரப்படும் போது மேலே குறிப்பிடப்பட்ட புள்ளி வழங்குதல் பிரதான விடயம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய புள்ளியுடனாகும். நேர்முகப் பரீட்சையின் பொருட்டான விபரமான புள்ளி வழங்கும் விதிமுறைகளை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு சுகாதார அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## அட்டவணை IX

**பணிப்பாளர் (தாதியர் பொதுச் சுகாதாரம்) பதவிக்கு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் தேர்ந்தெடுப்பதற்கான புள்ளிகள் வழங்கும் விதிமுறைகள்.**

| | | |
|---|---|---|
| 1. | தாதிச் சேவையில் (பொதுச் சுகாதாரம்) விஷேட தரத்திற்கான சேவை மூப்பிற்கு | - 30 புள்ளிகள் |
| 2. | தாதிச் சேவையில் (பொதுச் சுகாதாரம்) அனுபவத்திற்கு | - 30 புள்ளிகள் |
| 3. | விடயப்பரப்பு தொடர்பான கல்வித் தகைமைக்கு | - 25 புள்ளிகள் |
| 4. | விடயப் பரப்பு தொடர்பான வேறு வெளிவாரியான செயற்பாடுகளுக்கு | - 10 புள்ளிகள் |
| 5. | நேர்முகப் பரீட்சை குழுவின் தீர்மானத்தின்படி திறமை, தலைமைத்துவம், எண்ணக்கரு, ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறமைக்கு | - 05 புள்ளிகள் |

மொத்தப் புள்ளிகள் - 100

**குறிப்பு :**

ஆட்சேர்ப்பிற்காக விண்ணப்பங்கள் கோரப்படும் போது மேலே குறிப்பிடப்பட்ட புள்ளி வழங்குதல் பிரதான விடயம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய புள்ளியுடனாகும். நேர்முகப் பரீட்சையின் பொருட்டான விபரமான புள்ளி வழங்கும் விதிமுறைகளை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு சுகாதார அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## அட்டவணை X

*பணிப்பாளர் (தாதியர் கல்விச் சேவை) பதவிக்கு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் தேர்ந்தெடுப்பதற்கான புள்ளிகள் வழங்கும் விதமுறைகள்.*

| | | |
|---|---|---|
| 1. | தாதிச் சேவையில் (கல்வி) விஷேட தரத்திற்கான சேவை மூப்பிற்கு | - 30 புள்ளிகள் |
| 2. | தாதிச் சேவையில் (கல்வி) அனுபவத்திற்கு | - 30 புள்ளிகள் |
| 3. | விடயப்பரப்பு தொடர்பான கல்வித் தகைமைக்கு | - 25 புள்ளிகள் |
| 4. | விடயப் பரப்பு தொடர்பான வேறு வெளிவாரியான செயற்பாடுகளுக்கு | - 10 புள்ளிகள் |
| 5. | நேர்முகப் பரீட்சைக் குழுவின் தீர்மானத்தின்படி திறமை, தலைமைத்துவம், எண்ணக் கரு, ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறமைக்கு | - 05 புள்ளிகள் |

மொத்தப் புள்ளிகள் - 100

**குறிப்பு :**

*ஆட்சேர்ப்பிற்காக விண்ணப்பங்கள் கோரப்படும் போது மேலே குறிப்பிடப்பட்ட புள்ளி வழங்குதல் பிரதான விடயம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய புள்ளியுடனாகும். நேர்முகப் பரீட்சையின் பொருட்டான விபரமான புள்ளி வழங்கும் விதிமுறைகளை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு சுகாதார அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*12- 59*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.